Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
Nationa Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன்; 389
தேசிய தினசரி
மலர் 18
இதழ் 99

யாழ்ப்பாணம் வைகாசி 8 ரபீஉல் 26 சனிக்கிழமை (22-5-71)

வூல்ஸிலி
நீர்ப்பாசன யந்திரங்களும்
உதிரிப்பாகங்களும்
மோட்டார் வாகன
உதிரிப்பாகங்களும்
நிதான விலையில் விற்பனை செய்யும்
ஸ்தாபனம்
ஸ்டீவின்சன்ஸ்
(மோட்டார் அன்
என்ஜினியரிங் டிவிஷன்)
20/5, ஸ்ரான்லி ரோட் — யாழ்ப்பாணம்.

# வேலைநீக்கம் செய்ய தொழில் கமிஷனர் அனுமதி வேண்டும்

## மீறுவோருக்கு 2 வருடச் சிறை!

## ஆட்சிமன்றத்தில் புதிய மசோதா

— நமது நிருபர் பெரி சுந்தரலிங்கம் —

கொழும்பு, சனி

ஒரு தொழிலாளியின் சம்மதமின்றியோ அல்லது தொழில் ஆணையாளரின் அனுமதியின்றியோ குறிப்பிட்ட தொழிலாளியை வேலை நீக்கம் செய்யமுடியாது. அவ்விதம் செய்யும் முதலாளிமார் ஆறு மாதத்துக்குக் குறையாமலும் இரண்டுவருடத்துக்கு மேற்படாமலும் சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும்.

இதற்கான மசோதா ஒன்றை ஆட்சிமன்றத்தில் தொழில் அமைச்சர் திரு. எம். பி.டி. சந் ஸ்ரீவர்த்தன நேற்று சமர்ப்பித்தார்.

அச்சுத்தொழில், கடுட்டுத்தொழில் தேயிலை வளர்ப்பு, ரப்பர் ஏற்றுமதி மதுபானம்உற்பத்தி மினரலவாசனைத்திரவிய உற்பத்தி, தீப்பெட்டி தயாரிப்பு சினிமாத்துறை. துறைமுகத்தொழில் தெங்குப்பொருள் உற்பத்தி கட்டிடத்தொழில் மற்றும் பீடி பாண், ஒலி, ஐஸ், தும்பு உடுப்பு புகையிலை பிஸ்கட்ஸ் டயர் உற்பத்தி போன்ற 31 தொழில் ஸ்தாபனங்களில் கடமையாற்றும் தொழிலாளருக்கு நன்மை கிடைக்கும் வகையில் இந்த மசோதா தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் அவர்களாகவே தொழிலை விட்டுப்போக வேண்டும் என்றும், அவ்விதம் தொழிலாளரின் விருப்பமின்றி அவர்களை வேலையிலிருந்து விலக்குவது குற்றமாகும் என்றும் அந்தமசோதாவில் கூறப்பட்டுள்ளது.

ஏற்கனவே பெறப்பட்ட தொழில்கமிஷனின் அனுமதியின் பேரில் மட்டுமே குறிப்பிட்ட தொழிலாளரை வேலையிலிருந்து நீக்க இந்த மசோதா இடமளிக்கிறது.

இந்த மசோதாசட்டமாக்கப்பட்டு அமுலுக்குவரும் காலத்திலிருந்து ஆறுமாதங்களுக்கு முற்பட்ட காலத்தில், பதினைந்துக்கும் குறைவான எண்ணிக்கையுள்ள தொழிலாளரை உடையமுதலாளிமாரை இந்தச்சட்டம் கட்டுப்படுத்தாது ஒருகுறிட்ட காலத்துக்கு குறைவாகக் கடமையாற்றிய தொழிலாளியையும் இந்தச்சட்டம்கட்டுப்படுத்தாது.

அரசாங்கசேவைக்கமிஷன்

[6-ம் பக்கம் பார்க்க]

குருநாகலில்

## பயங்கரவாத தாக்குதல்கள் பெருமளவு குறைந்துள்ளது

கோட்டை, வெள்ளி

குருநாகலைப் பகுதியில் பரவலாக இடம்பெற்று வந்த பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளதாக நேற்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். நாசகார நடவடிக்கைகளைக் கைவிட்டுவிட்டு பயங்கரவாதிகள் குடிமக்களுடன் சேர்ந்துகொள்ளமுயற்சித்து வருவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்

பல இடங்களிலிருந்து நேற்று மட்டும் 52 பயங்கரவாதிகள் பாதுகாப்புப்படையினரிடம் சரணடைந்துள்ளனர்.

கேகாலையில் 15 பேரும், குருநாகலையில் 13 பேரும், அனுராதபுரத்தில் 8 பேரும் சரணடைந்தனர். கண்டி, பதுளை, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களிலிருந்தும் பலர் சரணடைந்துவருவதாக இராணுவ அறிக்கை ஒன்று கூறுகிறது.

கேகாலையில் பெருந்தொகையான டைனமைட்டுகளையும் ஆயுதங்களையும் பாதுகாப்புப்படை மீட்டுள்ளது. இங்கு 42 பேரைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

லியங்கம் என்னுமிடத்திலும் 4 பயங்கரவாதிகள் கைதாகியுள்ளனர் இங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த துப்பாக்கிகளையும் கிராமவாசிகள் பொலிசாருக்குக் காட்டிக் கொடுத்துள்ளனர்.

# செனட் ஒழிப்பு மசோதா மீண்டும் நிறைவேறியது

## யூ. என். பி., தமிழரசு எதிர்ப்பு

## காங்கிரஸ், தஹநாயக்கா ஆதரவு

கொழும்பு, வெள்ளி

செனட்சபையை ஒழிப்பதற்கான மசோதா இன்று ஆட்சிமன்றத்தில் சகல கட்டங்களிலும்நிறைவேறியது.

மசோதாவை ஆதரித்து 113 பேரும், எதிர்த்து 15 பேரும் வாக்களித்தனர். ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழரசுக்கட்சியும்எதிர்த்து வாக்களித்தன. தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 3 எம் பிக்களும் மசோதாவை ஆதரித்து வாக்களித்தனர். ஐக்கியதேசியக் கட்சியைச் சேர்ந்த காலி எம். பி டாக்டர் டபிள்யூ தஹநாயக்காவும் மசோதாவை ஆதரித்தார்,

முன்னைய கூட்டத்தொடரின்போது ஆட்சி மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இந்த மசோதா செனட்சபையில் நிறைவேற்றப்படாததால் காலாவதியானதைத் தொடர்ந்து இரண்டாவது வாசிப்புக்காக இது சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

அரசியல் சட்ட பிரகாரத்தின்படி குறிப்பிட்ட மசோதாவை மீண்டும் செனட்சபை 6மாதகாலத்துக்குள் நிறைவேற்றினாலும்சரி நிறைவேற்றாவிட்டாலும்சரி இம்மசோதா சட்டமாகும்.

உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், திரு. கா. பொ. இரத்தினம், திரு. ஜெயக்கொடி, திரு வி என். நவரத்தினம், திரு ஜே ஆர் ஜெயவர்த்தன ஆகியோர் இம்மசோதாவை எதிர்த்துப் பேசினர்.

கிளிநொச்சி எம் பி, திரு. வி. ஆனந்தசங்கரி மசோதாவை ஆதரித்துப் பேசுகையில் கூறியதாவது: இருசபைகள் உள்ள ஆட்சிமன்றம் இலங்கைக்குத் தேவையென்று திரு. ஜி ஜி. பொன்னம்பலம் கூறிவந்ததாக இன்று இங்கு பேசிய உடுவில் எம். பி. திரு. தர்மலிங்கம் கூறினார். இன்று அமுலிலிருக்கும் இரண்டாவது சபையான சபைதான் இலங்கைக்கு வேண்டுமென்று எங்கள் தலைவரோ, எங்கள் கட்சியோ கூறவில்லை. திரு. வி. என். நவரத்தினம் பேசும்போது தபாலமைச்சரை ஒரு விஷப்பாம்பு என்று சொன்னார். இதற்கு முன்னர் பல தடவைகளில் செனட்சபையிலிருந்த பல தமிழரசுவிஷப்பாம்புகள்எங்கள் தலைவரை கொத்தியிருக்கின்றன என்பதைத் திரு: நவரத்தினம் உணரவேண்டும். கடந்த 25 வருடங்களாக நாம் எமது கொள்கையிலிருந்து தவறவில்லை என்றார்.

## ஊரடங்கு நேரம்

இன்று மாலை 7-30 முதல் நாளை காலை 4-30 வரை

பயங்கரவாத நடவடிக்கை

# சகலருக்கும் நன்றி கூறுகிறார் பிரதமர்

கொழும்பு, சனி

ஏப்ரல் மாதம் 5ந் திகதி இடம்பெற்ற பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் வெற்றி அடைந்திருந்தால் நாமோ அல்லது எம். பிக்களோ இந்தக் கூட்டத்தில் உயிரோடிருக்கமுடியாதென பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நேற்று ஆட்சிமன்றக்குழுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

பிரதமர் மேலும் கூறியதாவது: எதிர்பாராத யுத்தத்தில் அரசாங்கம் ஈடுபடவேண்டியிருந்தது. எமக்குள் இப்படி எதிரிகள் உள்ளுக்கு இருப்பதாக நான் நினைத்திருக்கவில்லை. முதல் நாள் தாக்குதலின்போது பொலிசாருக்கு இராணுவ உதவி இருக்கவில்லை. தங்களிடம் இருந்த மிகக் குறைந்த சக்திகளைக்கொண்டு எதிரிகளை எதிர்கொண்டு தாக்கி நாட்டைக் காப்பாற்றியுள்ளனர்.

எமது கூட்டுச்சேராக் கொள்கை காரணமாக யோசிய முன்னறிவித்தலின்றி உதவிபுரிந்த நாடுகளுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்நாட்டு மக்களையும், நாட்டையும் காப்பாற்றி தன்னிகரற்ற சேவையாற்றிய பொலிஸ், இராணுவம் தொழிற்சங்கங்கள் மற்றும் ஒத்துழைப்பு நல்கிய பொதுமக்களுக்கும் எமது நன்றி. 98 சதவீதமான அரசாங்க ஊழியர் கொடுத்த ஒத்துழைப்புக்கும் எமது நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீலிக்ஸ் கனடா பயணம்

கோட்டை, வெள்ளி

பொதுநிர்வாக உள்நாட்டு உள்ளூராட்சிமன்ற அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர் டயஸ் பண்டாரநாயக்கா கனடாவில் நடைபெறவிருக்கும் பொதுநல நாடுகளின் ஆட்சிமன்ற சங்கக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக நேற்று கனடா பயணமானார்.

பொதுநிர்வாக உள்நாட்டு உள்ளூராட்சிமன்ற அமைச்சின் ஆட்சிமன்றக் காரியதரிசிதிரு. நீல் டி அல்விஸ் பதில் உள்நாட்டு உள்ளூராட்சி பொதுநிர்வாக அமைச்சராகச் சத்தியப்பிரமாணம் செய்வார்.

## ஜூன் 17-ல் ஆசிரியர் பரீட்சை

கோட்டை, வெள்ளி

இம்மாதம் 25-ம் திகதி நடைபெறவிருந்த சிங்கள தமிழ் ஆசிரியர் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது. இப் பரீட்சை ஜூன்மாதம் 17-ம் திகதி நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 4 கோடி ரூபா சேமிப்புமூலம் பெறலாம்

கோட்டை, வெள்ளி

வருடமொன்றிற்கு கட்டாய சேமிப்பு மூலம் 4 கோடி ரூபா கிடைக்குமென வருமானவரி இலாகாவின் உயர்தர அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் 25 இலட்சத்துக்கும் அதிகமானோர் தமது விபரங்களைச் சமர்ப்பித்துள்ளதாகவும் சம்பளமில்லாத வருமானமாக 6 ஆயிரம் ரூபாவுக்கு அதிகமாகப் பெறுபவர்களிடமிருந்து வருடமொன்றுக்கு 2 கோடியே 80 இலட்சம் ரூபாவும், சம்பளம் பெறுபவர்களிடமிருந்து 1 கோடியே 20 இலட்சம் ரூபாவும் கிடைக்கும் எனக் கூறியுள்ளார்.

## கேள்வி விளம்பரம்

கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், நெல்லியடி, கரவெட்டி.

### வெற்றுச் சாக்குகள் விற்பனவு

மேற்படி சங்கத்தில் உள்ள வெற்றுச் சாக்குகளை விற்பனை செய்வதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. விபரங்களுடன் உங்கள் கோரிக்கைகளை 30-5-71-ந் திகதிக்கு முன் பதிவுத்தபால் மூலம் எனக்கு அனுப்பப்படல் வேண்டும். இத்துடன் வைப்புப் பணமாக ரூபா 10/- காசுக்கட்டளையாக மேற்படி சங்க முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். (Money order) தெரிவுக்குப் பின் வைப்பு பணம் திருப்பிக்கொடுக்கப்படும்.

கு. சோமசுந்தரம்,
பொது முகாமையாளர்.
20-5-1971. 3299

## தேவை

கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், நெல்லியடி, கரவெட்டி.

### தற்காலிக கொள்வனவு உத்தியோகத்தர்

மேற்படி சங்கத்திற்கு உடனடியாக ஒரு கொள்வனவு உத்தியோகத்தர் தேவைப்படுகின்றது.

பின்வரும் தகுதியுடையோர் பதிவுத்தபால மூலம் எனக்கு 5-6-71-ந் திகதிக்கு முன்பு அனுப்பப்படல் வேண்டும்.

தகைமைகள்:

1. க. பொ. த ப சித்தி யடைந்தவராக இருத்தல் வேண்டும். (G C E. ord L)
2. குறைந்தது ஐந்து வருட கொள்வனவு அனுபவம் இருத்தல் வேண்டும்
3. ஆங்கிலம் பேச எழுத வாசிக்கத் தெரிந்தவராக இருத்தல்வேண்டும்.
4. மேலதிக தகைமைகள்: சிங்களம் பேச எழுத வாசிக்கத் தெரிந்தவர்கட்கு சலுகைகள் வழங்கப்படும்.

வயது: 5-6-71-ந் திகதியன்று 25 வயதுக்குக் குறையாமலும் 40 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும்.

பிணை: காசுப்பிணை ரூபா 2000/- உறுதிப்பிணை ரூபா 10000/-.

சம்பளம்: நாளொன்றுக்கு ரூபா 10/- அத்துடன் அரசாங்க விகிதாசாரப்படி பிரயாணச் செலவுகளும் வழங்கப்படும்.

கு. சோமசுந்தரம்,
பொதுமுகாமையாளர்.
21-5-71. 3298

THE JAFFNA ACADEMY,
Chundikuli.
Phone No. 617

The Jaffna Academy re-opens on Tuesday 25th May 1971. Please apply for admissions immediately

3296 Director

## வரி விளம்பரம்

### தேவை

சோப் தயாரிப்பதில் அனுபவம் உள்ள ஆள் தேவை தபால் மூலம் விண்ணப்பிக்கவும். விலாசம்: வெ. சுந்தரம், வியாபாரி மூலை, பருத்தித்துறை

3121

### விற்பனைக்கு

காணித்துண்டு:

பிரம்படி, கொக்குவில் இருபக்க ஒழுங்கை கொண்ட பத்து பரப்பு நீள் சதுர காணி பிரயோசனத்துடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். செல்லநாயகம், பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு. 3123

இங்கிலாந்திலிருந்து றிகொண்டிஷன் செய்து வரவழைக்கப்பட்ட இங்கிலீஸ் மேக் (Mitchell Lathe) கடைச்சல் மெஷின் நீளம் 9 அடி உயரம் 12 அங்குலம் விற்பனைக்குண்டு. பிளுன்ஸ் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும் விலை விபரங்களுக்கு: K S. பாலசிங்கம், கொழும்புத்துறை தபால்கந்தோருக்கு முன்னால் 90, கொழும்புத்துறை றோட், யாழ்ப்பாணம். 3122

### கல்வி

பெற்றோர்களுக்கு:- 3 வயது தொடக்கம் 5 வயது வரையுள்ள பாலர்களுக்கு மொன்ரிசோரி முறையில் கல்வி பயிற்றப்படுகின்றது. பாலர் பயிற்சி பெற்ற ஆசிரியை கற்பிக்கின்றார். மாதக்கட்டணம் ரூ. 7-50 மட்டுமே. இன்னும் சில மாணவருக்கே இடமுண்டு. விண்ணப்பிக்கவும். அன்பு பாலர் பாடசாலை, 330, கே. கே. எஸ். வீதி. (சிதா சோடாக் கம்பனியருகு) யாழ்ப்பாணம். 3112

## ஆலய உற்சவம்

சுழிபுரம் வெள்ளி

சுழிபுரம் பறுளாய் சிவசுப்பிரமணிய சுவாமிகள் கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 28-ம் திகதி கொடியேற்ற வைபவத்தோடு ஆரம்பமாகிறது. தேர்த்திருவிழா அடுத்த மாதம் 7-ம் திகதி நடைபெறும்

## சிரமதானம்

சுழிபுரம் செவ்வாய்

சுழிபுரம் கலைமகள் சனசமூக நிலையத்தினர் நிலையப் போஷகர் டாக்டர் செல்லையா தலைமையின்கீழ் பறளாய் முருகன் ஆலயத்தின் அரசடி மரத்தைச் சுற்றியுள்ள பகுதியை சிரமதானமூலம் துப்பரவு செய்தனர்.

## டபிள் டெக்கர் தீக்கிரை

கோட்டை, வெள்ளி

பம்பலப்பிட்டியில் அரசாங்க வீடமைப்புத் திட்டத்துக்கு முன்பாக வீதியில் நிறுத்தப்பட்டிருந்த இரட்டைத்தட்டு பஸ் ஒன்று திடீரெனத் தீப்பிடித்து சாம்பரானது. தியணைக்கும் படையினர் வந்து தீயை அணைக்கத் தொடங்குமுன் பஸ் முற்றாகத் தீக்கிரையானது


RAJAH — JAFFNA
Daily: 10-30a.m. 1-30&4-00p.m.
Anthony Quinn and Tonny Bill
in
THE LAST WARRIOR
(Scope&Color-form)

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி காலை10-00 பி.ப.2-00
சிவாஜி கணேசனும் கே. ஆர். விஜயா நடித்த
ராமன் எத்தனை ராமனடி

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30, பி.ப. 200 மணி
★ ரவிச்சந்திரன
★ ஜெயலலிதா
★ மனோரமா
★ ரங்கராவ்
நடித்த
குமரிப் பெண்

கெப்பிட்டல்
காலை 10, பி.ப.2-00 மணி
கை கொடுத்த தெய்வம்

லிங்கன்
காலை 10, பி.ப.2-00 மணி
அன்பே வா

ஹைலன்
காலை 10, பி.ப.2-00 மணி
எதிரிகள் ஜாக்கிரதை

பிளாஸா
காலை 10, பி.ப.2-00 மணி
பாலும் பழமும்

அடுத்த வெளியீடு
மூன்றெழுத்து
(மர்மச் சித்திரம்)

நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
Daily 10-30 A. M. only
CHINESE ADVENTURE
in CHINA
2-30 மட்டும்
பூவா தலையா

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30 a.m
Christopher George
in
PROJECT X
(Techni-Color)
தினசரி பி. ப. 2-00
ஜெய்சங்கர்-கே ஆர். விஜயா
நடித்த
பெண்ணை வாழவிடுங்கள்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி
காலை10-30, பி.ப.1-30
சிவாஜிகணேசன்-K.R. விஜயா
நாகேஸ்
நடித்த
திருடன்

REGAL (Jaffna)
Daily 10-30 a m 2 & 4-15 p. m
Dean Martin
Ann Margret
in
MURDERERS ROW
(color-Spy film)

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி
காலை10 30, பி. ப. 2-30
ஜெய்சங்கர் — வாணிஸ்ரீ
நடித்த
நேர் வழி

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

இன்று முதல் மகத்தான ஆரம்பம்
வின்ஸர்-யாழ்ப்பாணம்
காலை 10-30 பி. ப. 2-00
சிவாஜி கணேசன், ★ பத்மினி, ★ ஜெயலலிதா
★ நம்பியார் சுந்தரராஜன் ★ தங்கவேலு ★ மனோரமா
நடித்த
குருதட்சணை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி பதவிக்கு மீண்டும் போட்டியிடமாட்டாராம்

## அன்வர் சதாத் அறிவிப்பு

கெய்ரோ, மே 21

ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி பதவிக்கு தாம் மீண்டும் போட்டியிடப் போவதில்லை என ஜனாதிபதி அன்வர் சதாத் அறிவித்துள்ளார்.

கெய்ரோவிலுள்ள தேசிய சட்டசபையில் அவர் பேசுகையில் இத்தகவலை வெளியிட்டார். அவர் மேலும் பேசியதாவது!

நாட்டின் முக்கிய பதவியில் இருப்பவர்கள் எவ்வளவு காலம் அப்பதவியில் இருக்கலாமென்பதற்கு ஒருகால வரையறை இருக்கவேண்டும். தேசிய சட்டசபையில் விவசாயிகள் தொழிலாளர்களுக்குக் கூடுதல் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டும் என்று கூறிய திரு. சதாத், அண்மையில் ஏற்பட்ட மாறுதலினால் தமது அதிகாரம் அதிகரிக்கப்படவில்லையென்றும் இஸ்ரேலை அமெரிக்கா சமாதானத்திற்கு நிர்ப்பந்திக்கவேண்டுமென திரு. ரோஜரைக் கேட்டுக்கொண்டதாகவும் தெரிவித்தார்.

# பற்கள் அழகாக வளர மின்சார அதிர்ச்சி!

லண்டன், மே 21

வளரும் பிள்ளைகளில் பலருக்கு முன்வாய்ப் பற்கள் சிறிது முன்னால் தள்ளிக்கொண்டு நிற்பதையும், அவற்றிற்கிடையே இடைவெளிகள் இருப்பதையும் இன்று எங்கும் காணக்கூடியதாக இருக்கிறது. பற்கள் இப்படி முன் நீண்டு வருவதால், பிள்ளைகள் பலரது கேலிக்கும் நையாண்டிக்கும் உள்ளாகின்றனர். பற்கள் இப்படி வளருவது இயற்கையாக ஏற்படும் நிலை என்று தான் இதுவரை கருதப்பட்டு வந்தது. ஆனால், உண்மையில் பிள்ளைகள் தம்மை அறியாமலேயே குழந்தைப் பருவம் தொட்டு, உணவை உண்ணும் பொழுது நாவினால் முன்பற்களை தள்ளுவதால் தான் இந்நிலை ஏற்படுகிறது என்று பல வைத்திய நிபுணர்கள் இன்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.

நாவானது தினம்தினம் முன் பற்களைத் தள்ளிவிடாமல் இருக்க, வைத்திய ஆராய்ச்சியாளர்கள் இப்பொழுது ஒரு புதிய, புரட்சிகரமான முறையை கையாளத் தொடங்கியிருக்கிறார்கள். முன்பற்களை நாக்குத் தொட்டதும், மின்சார அதிர்ச்சி கொடுத்து அதைப் பின் வாங்க வைத்து 'அது செய்வது பிழை' என்று படிப்பிக்கும் முறைதான் இது!

இதற்காக மிக நுணுக்கமான மின்சார அதிர்ச்சி கொடுக்கும் கம்பி ஒன்று முன் பற்களின் பின்னால் இணைக்கப்படுகிறது நாக்கு இதனைத் தொட்டதும் மின் அதிர்ச்சி ஏற்படுகிறது. உடனே நாக்கு தானாகவே பின் வாங்கி விடுகிறது. உணவு உண்ணும் நேரம் தவிர்த்து நாளாந்தம் சிறிது காலத்திற்கு இதனைப் பாவிக்கப் பற்கள் மிக அழகாகவும் இடைவெளிகளின்றி வரிசையாகவும் வளருகின்றன என்று பல வைத்திய நிபுணர்கள் நிரூபித்திருக்கிறார்கள்.

## இந்திமொழி: கருணாநிதி கோரிக்கை

சென்னை, மே 21

ஹிந்தி மொழியை கட்டாயமாக்கும் மத்திய அரசின் நடவடிக்கைகளை மத்திய அரசு உடனடியாக வாபஸ்பெற வேண்டுமென நேற்றிரவு தமிழ்நாடு முதலமைச்சர். வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் தமிழ் மொழியை முதல் மொழியாகவும், ஆங்கிலத்தை இணைப்பு மொழியாகவும் பிரகடனப்படுத்த வேண்டுமென்றும், அந்தந்த மாநிலங்கள் அந்தந்த மாநில மொழிகளையே முதல்மொழியாகக் கொள்ள மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் என்றும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் தமிழ் நாடு முதலமைச்சருமான திரு மு. கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மேற்கத்திய பத்திரிகைகளுக்கு பாகிஸ்தானில் தடை

புதுடில்லி மே 21

மேற்குப் பாகிஸ்தானில் மேற்கத்திய நாட்டுப் பத்திரிகைகள் சஞ்சிகைகள் யாவும் தடை செய்யப்பட்டுள்ளன.

கராச்சியில் இருந்து வந்துள்ள பிறநாட்டவர்கள் இத்தகவலைத் தெரிவித்துள்ளனர். யாகியாஹான் அரசாங்கம் இப்பத்திரிகைகளுக்குத் தடைவிதித்துள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர், அங்கு செல்லும் பிறநாட்டவர்கள்கூட இப்பத்திரிகைகளைக் கொண்டு செல்லத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாம். விமான நிலையத்தில் வைத்தே பாகிஸ்தான் சுங்க அதிகாரிகள் இப்பத்திரிகைகள் சஞ்சிகைகளை பறிமுதல் செய்துவிடுகிறார்கள் எனக் கூறப்படுகிறது.

## அண்ணாமலை கத்தரிக்காய்

சிதம்பரம், மே 21

புதியவகை கத்தரிக்காய் ஒன்றை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கண்டுபிடித்திருக்கிறது. 'அண்ணாமலை' என்று பெயரிடப்பட்டுள்ள இக்கத்தரிக்காய் ஏக்கர் ஒன்றுக்கு 5 ஆயிரம் கிலோ விளையக்கூடியது. பூச்சிபுழுக்களால் இக்கத்தரிக்காய் பாதிக்கப்படமாட்டாதாம்.

## தாயும் மகளும் கொலை

உதகை, மே 21

கணவன் வீட்டிலில்லாத சமயம் அவருடைய மனைவியும் 16 வயது மகளும் படுகொலை செய்யப்பட்டனர். கடலூரைச் சேர்ந்த அதிக்காடு என்னும் இடத்தில் நடந்த இந்த இரட்டைக் கொலைகள் சம்பந்தமாக ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## காயாவில் தூசிப் புயல்

காயா மே 21

அண்மையில் காயாவில் வீசிய பயங்கர தூசிப்புயல் நால்வரின் உயிரைப் பலி கொண்டது. இத்தூசிப்புயலால் பெருந்தொகையாக சேதுமைக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## விசேஷ கமிட்டி

கோட்டை, வெள்ளி

நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்குவதற்காக விசேஷ கமிட்டியொன்றை காணி விவசாய அமைச்சர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவ நியமித்துள்ளார்.

## புயலுக்கு 25 பேர் பலி

புதுடில்லி, மே 21

அலகபாத்தில் 45 நிமிட நேரமாகத் தொடர்ந்து வீசிய புயற்காற்றினால் 25 பேர் மாண்டனர். மேலும் 100 பேர்படுகாயமுற்றனர். பெரும் தொகையான மரங்கள் முறிந்ததினால் மின்சாரத் தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுத் தடைபட்டதினால் பத்திரிகைகள் வெளிவரவில்லை எனத் தெரிய வந்துள்ளது.

## கைகலப்பில் 100 கைதிகள் கொல்லப்பட்டனர்

கல்கத்தா, மே 21

இங்குள்ள சிறைச்சாலை ஒன்றில் சிறைவைக்கப்பட்டிருந்த தீவிர கைதிகளுக்கும் சிறைச்சாலை மேற்பார்வையாளர்கள் சிலருக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பொன்றில் 10 கைதிகள் கொல்லப்பட்டனர். 20 சிறைச்சாலை மேற்பார்வையாளர்கள் உட்பட 100பேர் காயமடைந்தனர்

மறியல்சாலை உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. வி. கோஷ் மேற்படி தகவலைத் தெரிவித்துள்ளார்

மேற்படி சிறைச்சாலையின் சில மேற்பார்வையாளர்களுக்கும் சில கைதிகளுக்குமிடையே ஏற்பட்ட அடிபிடி காரணமாகவே குழப்பம் அங்கு ஏற்பட்டதாகவும் கைதிகள் மேற்பார்வையாளர்களை செங்கட்டிகள் ஓடுகள் முதலியவற்றால் தாக்கியதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 6 லட்சம் தொன் அரிசி தேவை

கல்கத்தா, மே 21

கிழக்கு வங்காளத்திலிருந்து வரும் அகதிகளுக்கு உணவளிப்பதற்காக 6,25000 தொன் அரிசி தேவையாக இருப்பதால் உடனே அனுப்பும்படி மத்திய அரசிடம் மேற்கு வங்காள அரசு கேட்டுள்ளது.

## புதுவகைக் கமரா கண்டுபிடிப்பு

லண்டன், மே 21

வானத்திலிருந்து படமெடுக்கக்கூடியதும் மிக அருகிலிருந்து படமெடுக்கக் கூடியதும் கறுப்பு வெள்ளை நிறங்களில் படம் எடுக்கக் கூடியதுமான புதுவகைக் கமரா ஒன்றை பிரிட்டன் கண்டுபிடித்துள்ளது. யாரும் எளிதில் பயன்படுத்தக் கூடிய இக்கமராவை பிரிட்டிஷ் பொலிஸார் தற்போது உபயோகிக்கின்றனர்

## விரைவில் இரு காரியாதிகாரிகள் பிரிவுகள்

அனுராதபுரம், வெள்ளி

அனுராதபுர மாவட்டத்தில் விரைவில் இரு காரியாதிகாரியின் ஆணைக்குட்பட்ட பிரிவுகள் அமைக்கப்படவுள்ளன.

மதவாச்சித் தொகுதியிலுள்ள ரம்பேவா எனுமிடத்திற்கும் பொறுப்பாக நியமிக்கப்பட இருக்கும் காரியாதிகாரி அப்பகுதியினை நிர்வகிப்பார். கோரப் பொத்தானைத் தொகுதியிலுள்ள கலன்பிந்துனுவீவாவின் காரியாதிகாரியினால் குருலுவீவாவின் குடியேற்றத்திட்டம் நிர்வகிக்கப்படும் எனத் தெரியவந்துள்ளது. இப்புதிய இருபிரிவுகளுக்கும் அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது.

# ரொக்கப்பணம் ஒரு லட்சம் 3 லட்சம் நகைகள் மீட்பு

காலி, வெள்ளி

இதுவரை எல்பிட்டியாப் பகுதியிலிருந்து ஒரு லட்சத்து ஆயிரம் ரூபாய் ரொக்கப்பணத்தைப் பொலிசாரும் பாதுகாப்புப் படையினரும் மீட்டிருப்பதாக காலிப் பொலிஸ் அதிபர் திரு. நவரத்தினம் தெரிவித்துள்ளார். மூன்று லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள நகைகளும் மீட்கப்பட்டிருப்பதாக அவர் அறிவித்தார்.

இந்த ரொக்கப் பணமும் நகைகளும் மக்கள்வங்கி எல்பிட்டிக் கிளையிலிருந்து பயங்கரவாதிகளால் கொள்ளையடிக்கப்பட்டவை யென்றும் திரு நவரத்தினம் கூறினார்.

முதலில் 45,000 ரூபாயும் பின்னர் 35,000 ரூபாயும் அடுத்து 23,135 ரூபாயும் பொலிசாரால் மீட்கப்பட்டதென்றும் அதன் பின்னர் 3000 ரூபாய் கண்டெடுக்கப்பட்டதென்றும் அவர் சொன்னார்.

# புத்தூர் கிராமசபைத் தலைவர் தெரிவுப் பிரச்னைக்கு தீர்வு

அச்சுவேலி, வெள்ளி

கடந்தஇருபது ஆண்டுகளுக்குமேலாக புத்தூர் கிராமசபைத் தலைவராய் இருந்த திரு. சி. நடராஜா தமது பதவியை ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து புதிய தலைவர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு இரு முறையாக கூட்டப்பட்ட கூட்டத்திற்குப் போதிய நேரம் இன்மையால் தலைவர் தெரிவு நடைபெறவில்லை.

இதன் பிரகாரம் உள்ளூர் ஆட்சி உதவி ஆணையாளரின் வேண்டுகோளின்படி அவரது காரியாலயத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பதினேழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இவ்வாலோசனைக்கூட்டத்தில் திரு. மு. திருநாவுக்கரசுவை தலைவராக தெரிவு செய்யும் படி பதினொரு உறுப்பினர் ஆலோசனை தெரிவித்தனர் மிகுதி அறுவரும் திரு. க. சின்னத்துரையை தலைவராகத் தெரியும் படி ஆலோசனை கூறினர்.

ஆலோசனை முடிவில் இது பற்றிய நகல் ஒன்றைத்தாம் உள்ளூராட்சி மந்திரிக்கு அனுப்பிவைப்பதாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் குறிப்பிட்டார்.



## உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளர்

யாழ்ப்பாணம், சனி

இணுவிலைச் சேர்ந்த திரு எஸ். கே. துரைசிங்கம் உடுவில், காங்கேசன்துறை தேர்தல் தொகுதிகளுக்கு உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கூ மொ விற்பனை நிலையத்தாலும், லங்கா சதொச லிமிட்டெட்டினாலும், கூட்டுறவு சமாசங்களினாலும், சங்கங்களினாலும் நடாத்தப்படும் டிப்போக்களுக்கும், கடைகளுக்கும், சந்தைப்படுத்தற் திணைக்களத்தினாலும் பொருட் கொள்வனவு திணைக்களத்தினாலும்நடாத்தப்படும் கடைகளுக்கும் சேகரிக்கும் நிலையங்களுக்கும் இவர் உத்தியோகப்பற்றற்ற பார்வையாளராகக் கடமையாற்ற வர்த்தக அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஒரு சமாதான நீதவானுவார். இணுவில் 'நியு லங்கா பாம்' உரிமையாளரான இவர் பொதுநல சேவையில் மிகுந்த ஈடுபாடுடையவர். (உரும். நி.)

மத்திய ஐரோப்பாவில்

## துருப்புக்களை குறைக்கசோவியத் வேண்டுகோள்

மாஸ்கோ, மே 21.

வட அத்திலாந்திக் ஒப்பந்த நிறுவனம் மத்திய ஐரோப்பாவில் துருப்புக்களை குறைப்பதுகுறித்துப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. லியோனிட் பிறஸ்னேவ் மேற்படி ஒப்பந்த நிறுவனத்துக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

ஜோர்ஜியா நாட்டின் 50-வது குடியரசு தினத்தை ஒட்டி நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே திரு. லியோனிட் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் அவர் மேலும் தனது 6 அம்ச சமாதானத் திட்டம் பற்றியும் எடுத்துக் கூறினார்.

## திடீர்ப் புயல்!

உடுப்பிட்டி, வெள்ளி

கடந்த புதன்கிழமைஇரவு வடமராட்சியில் பயங்கர வேகத்துடன் வீசிய புயல் காற்று ஒரு மணி நேரத்தின் பின்னரே அடங்கியது. திடீரென வீசிய இப்புயல் காற்றுடன் மழையும் பெய்தது.

புயல்தொடங்கிய சிலநிமிடங்களில் மின்சாரந்தடைப்பட்டதால் வடமராட்சிப் பகுதி முழுவதும் இருளில் மூழ்கியது. பல பனைமரங்களும், வாழைமரங்களும் இக்காற்றால் தரைசாய்ந்துள்ளன. இப்புயல் காற்றுத் தொடர்ந்து சிலமணிநேரம் வீசியிருந்தால் வடமராட்சிப் பகுதியில் பலத்த சேதமேற்பட்டிருக்குமென அச்சம் தெரிவிக்கப்பட்டது.

## வெளிநாடு செல்ல முடியாது

கோட்டை, வெள்ளி

பாடசாலைகளில் கடமையாற்றவேண்டிய நாட்களில் ஆசிரியர்கள் விசேட காரணமின்றி வெளிநாட்டுக்குச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் எனக் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டிலுள்ள கணவன் அல்லது மனைவியைப் பார்க்கவெனவும், லீவுநாட்களிலும் செல்ல அனுமதிக்கப்படும் ஆசிரியர்கள் பாடசாலை ஆரம்பமாகுமுன்பே நாடுதிரும்புவர் என உறுதிப்படுத்தவேண்டும்.

வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டியோர் அவ்வப் பிரதேச கல்வி இயக்குனருக்கு விண்ணப்பித்து அனுமதி பெற்ற பின்பே செல்லலாம். அனுமதிபெறமுன்பு நாட்டைவிட்டுச்செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் எனத் தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசாலையில்

## சைவ புராண பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம் சனி

ஒய்வுநாட்களில மாணவர்கள் புராணபடனம்செய்வதிலும் புராண வாசிப்புப் பெறுவதிலும் ஈடுபடுவது அவசியமாகும் என மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப்பிள்ளையார்கோவில் நல மடத்தில் சைவபுராண பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்த வித்துவான் இராமலிங்கம் பேசும்போது தெரிவித்தார் புராணபடனம் செய்வதனுல் கிரியா வழியில் மாணவர்கள் சமயத்தொண்டு செய்வதற்கு வசதி ஏற்படுகின்றது என அவர் மேலும் கூறினுர்

......

## அழகுராணி 'ராசிகா' சரணடைந்தார்

கோட்டை, வெள்ளி

அம்பாறை மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்த 70 பயங்கர வாதிகளில் 18 வயது அழகுராணி ஒருவரும் சரணடைந்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ராசிகா என்ற இந்த அழகு ராணி அம்பாறை மாவட்டத்திலுள்ள பயங்கரவாதிகளின் மாவட்ட தலைவராக விளங்கினுராம். இரண்டு வருடங்களுக்கு முன்னர் இவர் இம்மாவட்ட அழகு ராணியாகத் தெரிவுசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

— —

கொழும்புத்துறைக்கு

## 2 கிராம சேவையாளர் வேண்டும்

குருநகர், வெள்ளி

தற்பொழுது ஒரு கிராம சேவையாளர் பகுதியாக இருந்துவரும் கொழும்புத்துறைப் பகுதிக்கு இரண்டு கிராமசேவையாளர் பிரிவை ஏற்படுத்தித்தருமாறு உள்நாட்டமைச்சரைக் கோரும் தீர்மானமொன்று யாழ். மாநகரசபைக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கொழும்புத்துறை வட்டார உறுப்பினர் தம்புத்துரையா இப்பிரேரணையைக் கொண்டுவந்தார்.

கொழும்புத்துறைப் பகுதி முன்பு இருந்ததைவிட கூடிய ஜனத்தொகை கொண்டிருப்பதாலும், நீண்ட நிலப்பரப்பை அடக்கியுள்ளதாலும் இப்பகுதிக்கு ஒருகிராம சேவையாளர் சேவை போதாதிருக்கின்றதால் இப்பகுதி மக்களின் வசதிக்கமைய இப்பகுதியை இரண்டு கிராமசேவையாளர் பகுதியாக மாற்றியமைக்குமாறு தம்புத்துரையா தனது தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளார்.

—

## நீர்ப்பூதம்

லண்டன் மே 21

ஸ்கொட்லாந்தின் மேற்குப்புறப் பள்ளத்தாக்கில் மோரார் என்னும் ஏரியில் ராட்சத நீர்ப்பூதம் வசித்து வருவதாக நம்பகரமான சாட்சியங்கள் கூறுகின்றன.

அண்மையில் லண்டனில் நடைபெற்ற விஞ்ஞானிகள் மகாநாடொன்றின்போது இத்தகவல் வெளியாகியது. 27 பேர் இந்த ராட்சத ஜந்துவை நேரில் கண்டதாக ஆராய்ச்சியாளர்கள் பத்திரிகையாளரிடம் கூறினர். ஆராய்ச்சியாளர்கள் குழுவொன்று கடந்த கோடை காலத்தின்போது இந்த ஏரியை உன்னிப்பாகக் கவனித்து வந்தனர். அப்போது மூன்று தடவைகள் இந்த நீர்ப்பூதத்தை இவர்கள் நேரடியாகக் காண நேரிட்டது ஆயினும் அவர்கள் அதைப் படமெடுக்க முனைந்தபோது அப்பூதம் ஏரிக்குள் மறைந்துவிட்டதாம்!

## இம்மாத முடிவில் பரீட்சை

கோட்டை, வெள்ளி

ஜீ. சி. ஈ. உயர்தர விஞ்ஞான செய்முறைப் பரீட்சைகள் இம்மாத முடிவில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுவதாக கல்வி அமைச்சைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

நாட்டின் பலபகுதிகளிலுமுள்ள மாவட்ட கல்வி அதிபர்களோடு கலந்தாலோசித்த பின்னர் மேற்படி பரீட்சைக்கான திகதி குறிப்பிடப்படவிருக்கிறது. இப்பரீட்சை ஏப்பிரல் 19ம் திகதியில் இருந்தே நடைபெறுவது வழக்கம், ஆனுல் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள குழப்பநிலையால் பின்போடப்பட்டிருந்தது.

— —

## கிரிக்கெட்

நாவடி, வெள்ளி

கட்டப்பராய் கலைமணி விளையாட்டுக் கழகத்துக்கும், உரும்பராய் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கட் போட்டியில் கலைமணி விளையாட்டுக் கழகம் 2 விக்கெட்டுக்களால், உரும்பராய் கழகத்தை வென்றது.

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய விளையாட்டுக் கழகத்திற்கும், இருபாலை விநாயகர் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் ஆட்டத்தில் ஞானபாஸ்கரோதய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது

— —

## அல்வாய் வெற்றி

அம்பன், வெள்ளி

அல்வாய் யூனியனுக்கும் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற காற்பந்தாட்டப் போட்டியில் அல்வாய் யூனியன் 2-1 ஆட்டத்தால் வெற்றியீட்டியது.

—

## அனுதாபம்

சுழிபுரம் வெள்ளி

காலம்சென்ற வைத்திய கலாநிதி எம் குமாரசாமியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் வழக்கம்பரை தமிழ்மன்றத்தினரால் நிறைவேற்றப்பட்டு அவரது குடும்பத்தினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது, மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் கடமையாற்றும்போதும் தெல்லிப்பழையில் தனிப்பட்ட வகையில் வைத்தியம் செய்யும் போதும் அப்பகுதி மக்கள் யாவருக்கும் இவர் சிறந்த சேவையாற்றினுர் என்பது குறிப்பிடத்தக்கது.

......

## திறக்கப்பட்டது

அம்பன் வெள்ளி

ஆத்தியடி உப-தபாற்நிலையத்திற்கு நேற்றுமுதல் தொலைபேசித் தொடர்பு இணைக்கப்பட்டது. உப-தபாற்நிலைய தொலைபேசி இணைப்பின் திறப்புவிழா திரு. செ. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது

— —

## 4 வருடக் கடுழியம்

காலி, வெள்ளி

கொலை செய்யும் நோக்கமில்லாது கைமோசக்கொலை புரிந்ததை ஒப்புக்கொண்டவர் பேரில் காலி அசைஸ் நீதியரசர் திரு. ஈ. கியு. எம் சிறிமானே எதிர்க்கு நான்கு வருடக் கடுழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ந் திகதி தனது சகோதரனின் மனைவன 15 வயது கருணாவதி என்னும் இளம்பெண்ணைக் கத்தியால் குத்திக்கொலைசெய்ய முயற்சித்ததாக அம்பலாங்கொடை பொலிஸ்ப்பகுதியைச் சேர்ந்த எம். ஏ. சாலியகாந்தி என்பவர் மீது குற்றஞ்சாட்டி

## இன்றைய பலன்

வைகாசி மாதம் 8-ந் திகதி 22-5-71

மேடம்- நெருங்கிய நண்பர் ஒருவரை பகைத்துக் கொள்ள நேரிடலாம். பிள்ளையொன்றின் உடல் நலம் பாதிக்கப்படலாம்.

இடபம்- நிதியில் நல்ல அபிவிருத்தி காணப்படுகின்றது. நீண்டநாள் கடன் தொல்லை இன்று நிவர்த்தியாகும்.

மிதுனம்- பேராசையின் மூலம் குறுக்குவழியை நாடுவீர்கள். இதனுல் விபரீதங்கள் தோன்றக்கூடும். முன்னெச்சரிக்கை நன்று.

கடகம்- ஆக்கப்பணிகளில் ஈடுபடுவீர்கள். பிறருடைய ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். தாய்மொழி மூலம் செய்தி வந்து கிடைக்கலாம்.

சிம்மம்- பொதுவாக வாழ்க்கையில் அபிவிருத்தி காணப்படுகின்றது. அமைதியான நடவடிக்கையின் மூலம் எதையும் சமாளிக்கலாம்.

கன்னி- பூமிப் பிணக்குகளால் வழக்குவிவகாரங்களில் மாட்டிக்கொள்ள நேரிடும். எதிலும் உணர்ச்சிவசப்படாதிருக்கவும்.

துலாம்- எதிர்பார்த்த இன்பம் இன்று உங்களை அணைத்துக்கொள்ளும். காதல் ஜோடிகளுக்கு இன்று தித்திப்பான தினம்.

விருச்சிகம்- அதிக நம்பிக்கை ஆபத்தைத் தேடித்தரலாம். தன் கையே தனக்குதவி என்று செயலற்றவும். நிதானம் வெற்றியைத் தரும்

தனுசு- வைராச்சிரமான தினம். சிலவிடயங்களில் நீங்கள் அதிக உணர்ச்சி வசப்படாதிருக்கவும் மன அடக்கம் நன்று.

மகரம்- தொழில் மாற்றம் அல்லது இருப்பிட மாற்றத்திற்கு வழியேற்படலாம். இதன் மூலம் பதவியில் உயர்வும் கிடைக்கலாம்

கும்பம்-முயற்சியால் உயர்ச்சி உண்டு பணவிவகாரங்களில் நல்ல திருப்பங்கள் காணப்படும். சுகபோக நாள்.

மீனம்- பணம் பதிவேலைக்கு இடம் ஏற்படலாம். முகமன் பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## 154 வது வயதில் காலமானுர்

மாஸ்கோ மே 21

சோவியத் அஸர்பைஜானின் முதுபெரும் வயோதிபர் ஷிரின் ஹஸன் 154வது வயதில் காலமானுர்.

ஒரு விவசாயியான அவர் உலகின் மிக விருத்தாப்பிய மானவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். ஹஸன் அந்திம காலம்வரை கிராம சோவியத் சபையின் விவசாய நிர்ந்தரக் கமிஷனில் கடமையாற்றினுர்.

—

## நிவாரண நிதிக்கு ரூபா 500

அம்பன், வெள்ளி

பருத்தித்துறை நகரசபையின் இறுதி மாதாந்தக் கூட்டம் மேற்படி நகரசபையின் முதல்வர் திரு வி. தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது பயங்கரவாதிகளின் பாதிக்கப்பட்டோருக்கென ரூபா 500 நன்கொடை வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இறுதியாட்டத்தில்:

## நாவாந்துறை - குருநகர் இன்று மோதுகின்றன

யாழ்ப்பாணம், சனி

விளையாட்டமைச்சின் ஆதரவுடன், யாழ். மாவட்ட காரியாதிகாரியினுல் சனசமூக நிலையங்களிடையே நடாத்தப்பட்டு வந்த நொக்கவுட் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் இன்று யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்த இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென் மேரிஸ் சனசமூக நிலைய 'ஏ' பிரிவுக் கோஷ்டியும், குருநகர் சனசமூக நிலைய 'ஏ' பிரிவுக் கோஷ்டியும் மோதிக் கொள்கின்றன.

இன்று மாலை 4 மணிக்கு ஆரம்பமாக இருக்கும் இவ் விறுதிப் போட்டிக்கு, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா, பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளுவார்.

இந்த இறுதிப் போட்டியின் போது திரட்டப்படும் நிதி, பயங்கரவாதிகளினுல் பாதிக்கப்பட்ட பாதுகாப்புப் படையினரின் நிவாரண நிதிக்கு வழங்கப்படும் என விளையாட்டு அமைப்புச் செயலாளர் திரு. நா தேவபாலன், நமது நிருபரிடம் தெரிவித்தார். (தே நி)

## சைவப்புலவர் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி

தென்னிந்திய சைவசித்தாந்த சமாஜத்தார் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் அநுசரணையுடன் 1970-ம் ஆண்டு மார்கழியில் நடத்திய சைவப்புலவர் தேர்வுகளிற் சித்தியடைந்தோர் விபரம் வருமாறு:-

புகுமுகத் தேர்வு

செல்வி ச. சந்திரவதனு கோண்டாவில், செல்வி இ. லோகேஸ்வரி - கொழும்பு-2 இ. பரமேஸ்வரி - கொழும்பு-2 ச. தயாபரி கொழும்பு 13. செல்வன் ம. ஸ்ரீமுருகன் கொழும்பு 10

இளஞ் சைவப்புலவர் தேர்வு இரண்டாம் வகுப்பு

வே. சுப்பிரமணியம் கொழும்பு-2, சு. பரசுராமன் கிளிவெட்டி,

மூன்றும் வகுப்பு

செ குணபாலசிங்கம் - தெல்லிப்பழை, வை. நாகராஜன் அநுராதபுரம்,

சைவப்புலவர் தேர்வு

முதலாம் வகுப்பு

ஸ்ரீ பாண்டுரங்கன் திருப்பனந்தாள்,

இரண்டாம்வகுப்பு

வி வேணுகோபாலன் திருப்பனந்தாள்.

மூன்றும் வகுப்பு

சி திருநாவுக்கரசு இளவாலை அ பாலகிருஷ்ணன் திருப்பனந்தாள்.

குறிப்பு:

இவ்வடையான மிடம் பட்டவர் சமாஜத்தாரது பரிசுப்பணம் ரூபா 100பெறுவர்.

— —

## ஆயுள்வேத கல்விக்கு வடமொழி?

கோட்டை, வெள்ளி

ஆயுள்வேத கல்லூரியினுலும் வைத்தியசாலைச் சபையினுலும் நியமிக்கப்பட்டுள்ள விசேட கமிட்டியினர் ஆயுள்வேதம் பயிலும் மாணவர்க்கு வடமொழி கற்பிப்பது அவசியமா? எனவும் சிங்கள மாணவர்களின் இரண்டாவது பாடமாக எம் மொழியைக் கற்பிப்பது எனவும் ஆராய்வர் எனத் தெரியவந்துள்ளது.

இக்கமிட்டியின் அங்கத்தினர்களாக டாக்டர் திரு. திரு. ஏ சுனரத்தினம் அகில இந்திய வித்திய மகாமண்டலத்தைச்சேர்ந்த திரு. பிகிசக்வனு டாக்டர் திரு. எஸ். பி. அத்தனுசி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். — —

## ஓய்வு பெற இருக்கும் ஆசிரியர்களுக்கு

கோட்டை வெள்ளி

அடுத்த மூன்று மாதங்களில் ஓய்வுபெற இருக்கும் ஆசிரியர்கள் இந்த ஆண்டு டிசம்பர் வரையிலும் தமது ஆசிரிய சேவையிலிருக்கலாம்,

1971-ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையும் தமது சேவையிலிருக்கலாம் என்ற சுற்றுநிருபம் ஒன்றை கல்வி அமைச்சு அனுப்பிவைத்துள்ளது. இந்தச் சலுகை இந்த வருடம் ஏப்ரல் மாதம் 29ம் திகதிக்கு முன்னர் ஒய்வு பெறும் ஆசிரியர்களுக்கு இல்லை என்றும் அந்த சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

......

## சிரமதானம்

குருநகர், வெள்ளி

கால்நடைகளை பாதுகாக்கும் நோக்குடன் கால்நடைகளுக்கான குடிநீர் வசதியை ஏற்படுத்தும் வகையில் மண்டைதீவு பனையடிக் காட்டில் பாவனையற்று நிரவுண்டு கிடந்த குளம் ஒன்றை இக் கிராம சபையின் 2-ம் வட்டார உறுப்பினர் கு. க. நடராசா தலைமையில் 25 வாலிபர்கள் கொண்ட கோஷ்டியினர் சிரமதானமூலம் வெட்டி திருத்தியுள்ளனர்.

......

## இந்தியா இலங்கையின் உதவியை நாடுகிறது

கோட்டை, வெள்ளி

வங்காள தேசத்துக்கு உதவி செய்ய இந்தியா இலங்கை அரசின் உதவியையும் நாடியிருப்பதாகத் தெரிய வருகிறது

இது சம்பந்தமாகச் சமீபத்தில் இலங்கையிலுள்ள இந்தியத் தூதர் திரு வை.கே. பூரி இலங்கைப் பிரதம திருமதி பண்டாரநாயக்காவைச் சந்தித்துப் பேசியதாககூறப்படுகிறது. ...

## இன்று

நவாலி, சனி

இன்று நவாலியூர் சித்தமணிப்பிள்ளையார் கோவில் நல்லைஞானசம்பந்த ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் 'மங்கையர்க்கரசியார்' என்னும்பொருள் பற்றி கதாப்பிரசங்கம் நடாத்தவுள்ளார்.

......

## மறுபரிசிலனை செய்ய உத்தரவு

கோட்டை, வெள்ளி

ஜி சி. ஈ. சித்தியடைந்தவர்களுக்கான ஆசிரிய நியமனங்களை மீண்டும் மறுபரிசிலனை செய்யுமாறு கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதின் மஹ்மூத் சம்பந்தப்பட்ட கல்வியமைச்சு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்

இவ்வருடம் மே மாதம் 2500 ஜி சி. ஈ. தராதரப் பத்திரம் பெற்ற ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதற்குக் கல்வியமைச்சு சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தது. நாட்டில் ஏற்பட்ட குழப்பநிலை காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டதால் மேற்படி நியமனங்கள் நடைபெறவில்லை.

தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களில் பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புடையவர்களை விலக்கும் நோக்கத்துடனேயே அமைச்சர் மேற்படி நடவடிக்கையை எடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபகுதி அசைஸ் விசாரணை:

# 'விசாரணை ஆரம்பமானபின் 'ஈழநாடு' படிப்பதில்லை'

## பருத்தித்துறை கொலை வழக்கு

யாழ்ப்பாணம், சனி

"ஈழநாடு" பத்திரிகை முன்பு வாசிக்கிறனான். இவ்வழக்கு விசாரணை ஆரம்பமான பின் 'ஈழநாடு' படிப்பதில்லை. ஏனெனில் பத்திரிகையைப் படித்தால் நான் சொல்லவேண்டியதை மறந்துவிடுவேன்' இவ்வழக்குத் தொடங்கிய நாள் முதல் நான் பத்திரிகை வாங்குவதில்லை'

பருத்தித்துறை கொலை வழக்கு விசாரணையின் போது குறுக்குவிசாரணையில் க. புலேந்திரலிங்கம் நேற்று மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் திரு. வின்சென்ட் தாமோதரம் முன்னிலையில் நேற்று எட்டாவது தினமாக விசாரணை செய்யப்பட்டது. விசாரணையைப் பார்ப்பதற்கு கோர்ட்டின் உள்ளே ஏராளமானோர் திரண்டிருந்தனர்

எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வகேட் ஜே ஏ பி செரிபிம் சாட்சியமளித்த க புலேந்திரலிங்கத்தை குறுக்கு விசாரணை செய்தார்

வழ: நீர் கண்டதை உமது சகோதரர்களுக்கோ சாட்சிக்காரர்களுக்கோ சொல்லவில்லையா?- சொல்லவேண்டிய அவசியம் ஏற்படவில்லை

வழ: கந்தையா தேவராசா காயமடைந்தது பற்றி நீர் கேட்கவில்லையா?- நான் கேட்க விரும்பவில்லை.

வழ: சகோதரர் செத்திருந்தாலும் அதைப்பற்றி விசாரித்திருக்க மாட்டீர்?- ஆம்.

வழ: தமிழ்ப் பத்திரிகை படிக்கிறனீரா? ஆம்.

இந்த வழக்கு விசாரணை பத்திரிகையில் வருவதுண்டு? இந்த வழக்கு விசாரணை தொடங்கியபின் நான் பத்திரிகை படிப்பதில்லை

வழ: ஏன்? ஏனெனில் நான் பத்திரிகை படித்தால் என் கருத்து மாறுபட்டு விடும்.

வழ: அதைப்படித்தால் கண்டதை மாற்றி சொல்ல வேண்டிவரும்? பத்திரிகை படித்தால் நான் கண்டதை மறந்துவிடுவேன்.

வழ: மறப்பது மாத்திரமல்ல காணாததையும் காணக்கூடும்? நான் அதை மறுக்கிறேன்.

வழ: 'ஈழநாடு' வாசிக்கிறனீரா? இவ்வழக்கு விசாரணை நடக்குமுன் வாசித்தேன். வழக்கு ஆரம்பித்த பின் வாசிப்பதில்லை.

பத்திரிகை வாங்குவதுண்டு வாசிப்பதில்லை?- வாங்குவதில்லை.

வழ: இவ் வழக்கு தொடங்கிய நாள் முதல் ஈழநாடு வாங்குவதில்லை?- இல்லை

வழ: இவ் வழக்கு கீழ் கோர்ட்டில் நடந்தபோது விசாரணை ஒவ்வொரு நாளும் "ஈழநாடு" பத்திரிகையில் வருவதுண்டு?- எனக்கு தெரியாது.

வழ: கீழ் கோர்ட்டு விசாரணை ஈழநாட்டில் வந்திராவிட்டால் இந்த விசாரணை எப்படி வரும் என அறிந்தீர்? நான் சுப்பிறீம் கோர்ட்டில் நடக்கும் மற்ற விசாரணைகளை ஈழநாடு பத்திரிகையில் படித்திருக்கிறேன். அதனால் இந்த வழக்கு விசாரணையும் பத்திரிகையில் வரும் என நினைத்தேன்

வழ: உம்மிடம் 3 சாரமிருக்கிறது?- ஆம்

வழ: சம்பவம் நடந்த காலத்தில் சாரம் வேட்டி உட்பட ஐந்தாறு உருப்படி வைத்திருந்தீர்?- ஆம்

வழ: சாரத்தை இரத்தினலிங்கத்தில் போட்டுவிட்டு ஓடினீர்?- ஆம்.

வழ: நேரே வீட்டுக்கு ஓடினீர்?- ஆம்

வழ: பெற்றோருக்கு நடந்ததை சொன்னீர்?- ஆம் வேட்டி உடுத்துக்கொண்டு சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தேன்.

வழ: நிச்சயமாக வேட்டி தான், சாரமில்லை?- ஆம்

வழ: வேட்டியைக் கட்டி வந்து காயக்காரர் சென்ற காரில் ஏறினீர்?- ஆம்

வழ: என்ன காரில் போனீர்?- எனக்கு தெரியாது.

வழ: ஒஸ்டின் காரனை?- எனக்குத் தெரியாது.

வழ: யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டே ஒஸ்டின் கார் தெரியாது என்கிறீரே?- நாங்கள் சமக்காரர்கள் எங்களுக்கு காரைப்பற்றி தெரியாது.

வழ: பாடசாலையில் போட்டிகளில் கலந்துகொண்டீர்?- ஒரு கோஷ்டிக்கு தலைமை தாங்கியிருக்கிறேன்

வழ: விளையாட்டு போட்டிகளுக்கு காரில் போவீர்கள்?- வானில் தான்போவோம்.

வழ: என்ன வான்?- தெரியாது.

வழ: ஒரு காரைப்பார்த்து என்னகார் என்று சொல்ல மாட்டீரா?- ஆம்

வழ: அது ஒரு சின்னக் கார்?- இல்லை பெரியகார்

வழ: நல்ல ஞாபகம்?- ஆம்.

நீதியரசர்: பின்னுக்கு எத்தனைபேர் இருந்தீர்கள்? 4 பேர்

வழ: முன்னுக்கு?- 2 பேர்.

வழ: பின் சீட்டில் காயக்காரரிடமிருந்து ரத்தமோடியது?- ரத்தம் ஓடவில்லை.

நீதியரசர்: தேவராசாவின் காயம் எப்படி இருந்தது?- கட்டப்பட்டிருந்தது.

வழ: நாகலிங்கத்தின் காயம்?- நான் காணவில்லை.

வழ: நாகலிங்கம் எப்படியிருந்தார்?- மயக்கமாக இருந்தார்

வழ: அவருடன் கதைக்கப்பார்க்கவில்லையா?- மயக்கமானவருடன் கதைக்க முடியாது.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

......

## வெளி நாடுகளில் அலுவலகங்கள் திறக்கப்படும்

கோட்டை, வெள்ளி

இலங்கை உல்லாசப் பிரயாணிகள் சபையின் ஆலோசகர் கமிட்டி இச்சபையின் பிரயாணத் தொடர்பான அலுவலகங்களை நியூயோர்க், யு. எஸ். ஏ, கனடா, அவுஸ்திரேலியா, மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்கன்டனேவியன் நாடுகள் ஆகிய இடங்களில் திறக்குமாறு ஆலோசனை தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் கப்பல் உல்லாசப் பிரயாண அமைச்சர் திரு. பி. பி.ஜி கலுகல்லவும் இலங்கை உல்லாசப்பிரயாணிகள்சபைத் தலைவர் திரு. தர்மசிறி சேனநாயக்காவும் ஆலோசக கமிட்டியைக் கூட்டி இலங்கை உல்லாசப் பிரயாணிகள்சபை பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்தியபோது மேற்கண்ட ஆலோசனை கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

......

கிராமப்புறங்களில்

## 30,0000 பேருக்கு வேலையில்லை

கோட்டை, வெள்ளி

கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பின்றி இருப்பவர்களில் 60 வீதத்தினர் 19 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்களாவர். இக்கிராமங்களில் ஏறக்குறைய 300,000 பேர் வேலைவாய்ப்பின்றி உள்ளனர்.

இது இலங்கை மத்திய வங்கியின் சமீபத்திய ஆய்வுகளின் முடிவிலிருந்து தெரியவந்துள்ளது.

1969-ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து 1970 ஜனவரிவரை மேற்படி ஆய்வு நடத்தப்பட்டது.

## பாம்பு தற்கொலை

சென்னை, மே 21

சென்ற சில நாட்களுக்குமுன் சென்னையை அடுத்துள்ள ஒரு புகையிரத நிலையத்தில் ஒரு பாம்பு எலியைத் துரத்திக்கொண்டு தண்டவாளத்தின் மேல் சென்றது. இதைப் பார்த்த மக்கள் அதைக் கொல்வதற்கு முயற்சி செய்த பொழுது அப்பாம்பு மக்களால் கொல்லப்படுவதிலும் பார்க்க தற்கொலையே சிறந்தது என்று நினைத்தது போலும் உடனே தண்டவாளத்தில் தலையை வைத்துப் படுத்துக்கொண்டது. சில நிமிடங்களில் வந்த புகையிரதமொன்றினால் அது கொல்லப்பட்டது. தலை தவிர மற்றப் பகுதிகள் சேதமடையவில்லை

## மலேசியா-சீனு நேரடிவர்த்தகம்

கோலாலம்பூர், மே 21

உணவுப்பொருள்கள், பாவனைப்பொருள்கள், துணிமணிகள் மற்றும் பொருள்களை சிங்கப்பூர், ஹொங்கொங் போன்ற நாடுகள் மூலம்வாங்காமல் நேரடியாகவே சீனவிடமிருந்து வாங்கிக்கொள்வதற்கு மலேசிய தேசிய கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளது. இத்தாபனத்தின் நிர்வாக டைரக்டர் அப்துல் ரஹ்மான் ஹமிடொன் இத்தகவலைத் தெரிவித்தார்

சீனவுக்கும் மலேஷியாவுக்குமிடையே நேரடி வர்த்தகத்தொடர்பு நன்கு ஸ்தாபிக்கப்பட்டதும் இந்தக் கூட்டுத்தாபனம் பெரும் பணியாற்றவிருக்கிறதாம்.

கருத்து

மலேஷியாவிலுள்ள ரப்பரை வாங்குதென்று சீன அறிவித்திருப்பது தென் கிழக்காசியாவில் அரசியல் நிலை எவ்வளவு துரிதமாக மாறிவருகிறதென்பதையே காட்டுவதாக "சிட்னி மோர்னிங் ஹெரால்ட்" என்ற பத்திரிகை கருத்துத் தெரிவித்திருக்கிறது

......

## விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், சனி

தச்சன்தோப்பு கொலை முயற்சி வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வின்சன் தாமோதரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதியரசர் விசாரணையை ஜூன் மாதம் 9-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

சரசாலை கொலை முயற்சி வழக்கு ஜூன் மாதம் 4-ம் திகதிக்கு ஒத்திபோடப்பட்டுள்ளது.

......

## தண்ணீர் தட்டுப்பாடு

உடுப்பிட்டி, வெள்ளி

கடந்த சில தினங்களாகப் பருத்தித்துறைப் பகுதியில் பொது மக்கள் தண்ணீரின்றி அவதியுற்று வருகின்றனர் பருத்தித்துறை நகரசபையால் தண்ணீர் விநியோகம் செய்யும் பொறி பழுதடைந்திருப்பதே இதற்குக் காரணமாகும்.

இதனால் இப்பகுதிப்பொது மக்கள் குடிப்பதற்காகத் தண்ணீர் தேடி வாளிகளுடன் அலைகிறனர்

## கருணாநிதி சுகவீனம்

சென்னை, மே 21

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி சுகவீனமுற்றிருப்பதாக இன்று கோயம்புத்தூரில் தெரிவிக்கப்பட்டது. இதனால் முதல் இரண்டு நாட்களுக்கும் அவரது நிகழ்ச்சிகளை ரத்து செய்துள்ளார்.

## தந்திப் பகுதிக்கு 70 லட்சம் ரூபா நஷ்டம்

கோட்டை, வெள்ளி

இலங்கைக்கு உதவ முன்வந்துள்ள பிறநாடுகளிடமிருந்து நாட்டின் தந்தித் தொடர்பைத் திருத்தியமைப்பதற்கு வேண்டிய பொருட்களை இலங்கை முக்கியமானவையாகக் கேட்கின்றது.

தந்தித் தொடர்புப் பகுதிக்கு 70 லட்சம் ரூபா சமீபத்திய குழப்பநிலையால் நஷ்டமேற்பட்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

......

## கொழும்பில் கண்நோய்

கோட்டை, வெள்ளி

கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் ஒருவிதக் கண்நோய் பரவிவருகிறது. தினசரி ஆயிரக்கணக்கானோர் சிகிச்சைக்காக கண் ஆஸ்பத்திரிக்கு வருகிறார்கள்.

இந்நோய் அவ்வளவு அபாயகரமானதல்ல வென்றாலும் நல்ல முறையில் கவனிக்கப்படாவிட்டால் கண்பார்வை கெட்டுவிடும் என பிரபல கண் டாக்டர் ஒருவர் பத்திரிகை நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

......

## அரிசி, மா, சீனி அதிகப்படியாக இறக்குமதி

கோட்டை, வெள்ளி

அரிசி, மா சீனி, மற்றும் உப உணவுப் பொருட்கள் கொண்ட பல கப்பல்கள் கொழும்புத் துறைமுகம் வந்து சேர்ந்துள்ளன.

இரு கப்பல்களில் 7000 தொன் அரிசியும் மற்றும் இரு கப்பல்களில் 21500 தொன் சீனியும், வந்து சேர்ந்துள்ளன. இவ்வார இறுதியில் 2184 தொன் பருப்புவகைகளும், 300 தொன் கருவாடும், 80 தொன் மாசியும் செத்தல் மிளகாய் மற்றும் வெள்ளைப் பூடு ஆகியன இறக்குமதி செய்யப்படவிருக்கின்றன.

......

## கனடாப் பிரதமர் ரஷ்ய அதிபர் பேச்சு

மொஸ்கோ, மே. 21

கனடாப் பிரதமர் திரு. ட்ரூடோ சோவியத் அதிபர் திரு நிக்கோலாய் பொட்கர்னியுடன் சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் வலுப்படுத்துவது சம்பந்தமாக இருநாடுகளுக்குமிடையிலான ஒத்துழைப்புப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

சோவியத், கனடிய பொருளாதார கலாச்சார உறவு ஒத்துழைப்பு பற்றியும் அவர்கள் பேசினர்.

## ஜெர்மன் அன்பளிப்பு

கோட்டை, வெள்ளி

நேற்று முன்தினம் 85000 ரூபா பெறுமதியான மருந்து வகைகளை மேற்கு ஜெர்மனி இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

அரசாங்கத்தின் சார்பில் டாக்டர் எஸ் டி சி விக்ரமசிங்க மேற்கு ஜெர்மன் தூதரக அதிகாரிகளிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

கலாநிலைய கேம்பிறிக்

WRITING PAD

(லெட்டர் பாட்)

5 1/2" X 8 1/2" — 50 தாள்

1. கோடு இல்லாதது சதம் 70
2. கோடு உள்ளது சதம் 95

வியாபாரிகளுக்கு கழிவு கொடுக்கப்படும்.

'ஈழநாடு'

(வர்த்தக அச்சுப் பகுதி)

த. பெ. எண். 49 — யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

கடவுள் எவனுக்கும் பாவத்தையோ புண்ணியத்தையோ தருவதில்லை. அறியாமை அறிவைக் கவர்ந்து கொள்ளவே அதனால் மனிதர்கள் மோகத்தை அடைகிறார்கள். —கீதை

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் வைகாசிமாதம் 8-ந் திகதி (22-5-71)

## பாடசாலைக்குப் புறப்படுங்கள்!

சகல பாடசாலைகளும் கல்வி நிலையங்களும் அடுத்த மாதம் 2-ந் திகதி திறக்கப்படவிருக்கின்றன. அரசாங்கத்தின் இந்த முடிவு பெற்றோர்களுக்குப் பெரும் ஆறுதலையும் மகிழ்ச்சியையும் அளிப்பதுடன் பயங்கரவாத இயக்கம் நசுக்கப்பட்டு நாடு பழையபடி சீரான நிலைக்குத் திரும்பியிருக்கிறதென்ற நிம்மதியையும் மக்களுக்கு ஏற்படுத்தும்.

நீண்டகால விடுமுறைக்குப்பின் பாடசாலைகள் ஆரம்பமாகின்றன. இந்த விடுமுறைகாலத்தில் இழந்தபடிப்பை ஈடுசெய்யும் பொருட்டு வாரத்தில் ஆறுநாட்களுக்குப் பாடசாலைகளை நடத்துவதென்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. அதாவது போயாவுக்கு முதல்நாளிலும் அரசாங்க விடுமுறை தினங்களிலும் வகுப்புக்களை வைப்பதென்பது அரசாங்கத்தின் முடிவு. இதன் மூலம் மாணவர்கள் இழந்த படிப்பை ஈடுசெய்யலாமென்பது அதன் கருத்து. வேலைநாட்கள் அதிகரிப்பதால் அதிகவேலை நடைபெறுமென்பது பொதுவானகருத்து. ஆனால் வேலைநேரத்தைக் குறைத்து வேலையை உழைப்பை அதிகரித்தால் அதுவே அதிகபயனுடையதாக இருக்கும். இழந்த படிப்பை ஈடுசெய்வது மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் உழைப்பிலும் உற்சாகத்திலுமே பெரிதும் தங்கியிருக்கிறது.

பாடசாலைக் கட்டிடங்களைத் திருத்தவோ பாடசாலைகளின் தேவைகளை நிறைவேற்றவோ அரசாங்கத்திடம் நிதிவசதியில்லை. இயன்றளவு செய்யக்கூடிய அளவுக்கு அரசாங்கத்தின் நிதிநிலைமை இப்போதைக்குச் சீராகுமென்றும் எதிர்பார்க்க முடியாது. கல்வி அமைச்சின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து நிவாரண நிதிக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படும் தொகை சேதமடைந்த சகல பாடசாலைகளையும் சீர் செய்யவோ பாடசாலைகளின் இதர தேவைகளை நிறைவேற்றவோ போதும் என்று சொல்ல முடியாது. பாடசாலைகளை அரசாங்கம் எடுத்திருந்தாலும் அதில் படிக்கும் பிள்ளைகள் தங்களின் பிள்ளைகள் தான் என்பதையுணர்ந்து பெற்றோர்களும் பெற்றோர் ஆசிரியர் சங்கங்களும் சேர்ந்து நிதிதிரட்டியும் சிரமதானம் செய்தும் பாடசாலைகளைச் சீரமைக்கவும் பாடசாலைகளின் தேவைகளை நிறைவேற்றவும் முன்வந்து பணிபுரிய வேண்டியது இந்த இக்கட்டான சமயத்தில் மிகமிக அவசியமாகும்.

இதேசமயம் பயங்கரவாத இயக்கத்துடன் மாணவர்கள் மட்டுமல்ல ஆசிரியர்களும் சம்பந்தப்படுத்தப்பட்டதுடன் சந்தேகத்துக்குரியவர்களாகவும் கருதப்பட்டனர்.

பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதும் இந்தப்பழியைப்போக்குவதற்கு ஆசிரியர்கள் தான் முழுமுயற்சிசெய்ய வேண்டும். எந்த அரசாங்கம் ஆட்சியிலிருந்தாலும் அந்த அரசாங்கத்துக்கும் மக்கள் விசுவாசமாக இருக்க வேண்டியதையும் மாணவர்கள் அரசியலை அறிந்திருக்கவேண்டுமே யொழிய கட்சி அரசியல் என்ற சேற்றில் காலிடக்கூடாதென்பதையும் மாணவர்களுக்கு உணர்த்தவேண்டிய கடமையும் பொறுப்பும் ஆசிரியர்களுடையதென்பதை மறந்துவிடலாகாது.

## இந்திய உதவி

இலங்கைக்கு வழங்கப்பட்ட இராணுவ உதவியினால் ஏற்பட்ட முழுச் செலவினையும் பொறுப்பேற்க இந்தியா முன்வந்துள்ளதாகவும் இச்செலவுத் தொகை சுமார் ஐந்து கோடி ரூபாவாக இருக்குமென்றும் ஒரு செய்தி கூறுகிறது. ஆபத்து நேரத்தில் விரைந்துவந்து உதவி செய்தது மட்டுமல்ல அதனால் ஏற்பட்ட செலவினையும் தானே ஏற்றுக்கொள்ள முன்வந்ததன் மூலம் இந்தியா தனது பெருந்தன்மையைக் காட்டியிருப்பதுடன் தனது பாரம்பரியப் பண்பாட்டையும் நிலைநாட்டியிருக்கிறது. இதேசமயம் என்னதான் வேறுபாடுகள் இருப்பினும் ஆபத்து ஏற்படும் போது அயலான்தான் உதவிக்கு வரவேண்டுமென்பதையும் அயலானுடன் நல்லுறவு வைத்திருக்க வேண்டியது எவ்வளவு அவசியமென்பதையும் இலங்கை உணர்ந்துகொள்ளக்கூடியமுறையில் இந்தியா நடந்திருப்பது அதன் ராஜதந்திரத்துக்கு ஒரு சிறப்பு என்றே சொல்லவேண்டும்.

1957-ம் ஆண்டில் இலங்கையில் பெருவெள்ளம் ஏற்பட்டு மக்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளானபோது அப்போது பிரதம மந்திரியாக இருந்த காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா வெளிநாடுகளிடம் உதவி கோரியபோது உடனடியாக ஓடோடிவந்து உதவியளித்தது அயல் நாடான இந்தியா தான்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கு மிடையில் உள்ள தொடர்பு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. இந்தியாவைத் தாய்நாடு என்றும் இலங்கையை அதன் சேய்நாடு என்றும்சொல்வதை இன்று சிலர் விரும்பாவிடினும் அந்த உறவும் தொடர்பும் இன்றுவரை நீங்காமல் தானிருக்கின்றன. இலங்கைக்கு ஒன்றென்றதும் இந்தியாவில் துடிப்பு ஏற்படுவதும் இந்தியாவில் ஏதும் நடந்தால் இங்கு படபடப்பு ஏற்படுவதும் இயல்பு.

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் பிரச்சினை சம்பந்தமாக இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் சிறிது மனக்கசப்பு ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டபோதிலும் இருநாடுகளும் நல்லுணர்வோடு ஓர் ஒப்பந்தத்தை செய்து அத்தகைய சூழ்நிலை ஏற்படாமல் தடுத்துக்கொண்டன.

அதிகார நோக்கத்துடன் கட்சி அரசியல் ஆதாயத்துக்காக இருநாடுகளிலுமுள்ள தீவிரவாதிகள் சில சிறு பிரச்சினைகளையும் பெரிதாக்க முனைந்தபோதிலும் ஆட்சி பீடத்திலும் வெளியேயும் பொறுப்பும் பெருந்தன்மையும் உள்ளவர்களால் இருநாடுகளுக்குமுள்ள நல்லுறவும் நல்லெண்ணமும் கெடாமல் காப்பாற்றப்பட்டது.

இருநாடுகளுக்குமிடையில் இன்று மீண்டும் ஏற்பட்டுள்ள பரிவும் பாசமும் நட்பும் நல்லுறவும் வலுப்பெற்று என்றும் நிலைபெறச் செய்வது இரு நாட்டு மக்களினதும் கடமையாகும்.

# இலங்கை கடற்பிராந்தியத்தில் அந்நியர் நடமாட்டம்?

## இந்திய கடற்படை தகவல் தருகிறதாம்

## ஹெலிகொப்டர்கள் திரும்புகின்றன

கோட்டை, வெள்ளி

இலங்கையில்பயங்கரவாதிகளின்வன்முறைச்செயல்கள் அதிகரித்ததைத் தொடர்ந்து இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோள்மீது உதவியளிப்பதற்காக இங்குவந்த இந்திய விமானப்படையைச் சேர்ந்த 'ஹெலிகொப்டர்' விமானங்கள் இலங்கையிலிருந்து திரும்பத்தொடங்கியிருப்பதாக ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

ஆறு அமெரிக்க 'ஹெலிகொப்டர்'களையும் இரண்டு ரஷ்ய ஹெலிகொப்டர்களையும் சரியாக இயக்கிப்பயன்படுத்துவதற்கு இலங்கை ஆயுதப்படையினர் பழகிக்கொண்டுவிட்டதால் இந்திய ஹெலிகொப்டர்களின் சேவை இனித்தேவையில்லையென்ற காரணத்தால் அவை திரும்புகின்றனவாம்.

சாதாரணமாக எவரும் செல்லமுடியாத பகுதிகளில் பயங்கரவாதிகளை எதிர்த்துப் போராடிய இலங்கைப் பாதுகாப்புப் படையினருக்குப் பொருள்களை விநியோகிப்பதில் இந்திய ஹெலிகொப்டர்கள் உபயோகிக்கப்பட்டுவந்தன.

ஆனாலும் இலங்கைக்கடற்பிரதேசத்தைக் காவல் புரிந்து வரும் இந்தியக் கடற்படை அணியைச்சேர்ந்த 5 கப்பல்களும் பண்டாரநாயகா சர்வதேச விமானநிலையத்தில் தங்கள் பொருள்களைக் காவல்புரிந்துவரும் 150 இந்திய ஆயுதப்படை வீரர்களும் இலங்கை அரசாங்கம் அவர்களது சேவையைவிரும்பும்வரை இலங்கை ரோயல் விமானப் படையினருக்குத் தொடர்ந்து உதவியளித்து வருவார்களென்றும் அந்தச் செய்தி கூறுகிறது.

என்றாலும் இவர்கள் இம்மாத இறுதியில் இந்தியா திரும்புவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேசமயம் இலங்கைக் கடற்பிராந்தியத்தில் அந்நியரின் நடமாட்டங்கள் பற்றிப் பெறுமதிவாய்ந்த தகவல்களை இலங்கை அரசுக்கு இந்தியக் கடற்படை அணி அளித்துள்ளதாகவும் அச்செய்தி கூறுகிறது.

## 300 பெண்கள் தடுப்புக்காவலில் உள்ளனர்

கோட்டை, வெள்ளி

பயங்கரவாத இயக்கத்தில் ஈடுபட்டுள்ளதாகக் கருதப்பட்ட 300 பெண்களை அரசாங்கம் தடுப்புக்காவலில் வைத்துள்ளது.

இவர்களில் அநேகர் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்ததாகவும் மற்றவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக புனர்வாழ்வுக் கமிட்டி செயலாளர் திரு. வீல் குணசேகரா அறிவித்துள்ளார். புனர்வாழ்வுக்கமிட்டி இவர்களுக்கென ஒரு புனர்வாழ்வுத் திட்டத்தைத் தயாரிப்பதாகத் தகவல் பகுதி தெரிவித்துள்ளது.

......

சிசிலியில்

## எரிமலைக்குழம்பு வெளியேறுகிறது

கட்டானியா, மே 21

சிசிலியில் உள்ள எட்னா மலையில் இருந்து எரிமலைக் குழம்பு வெளியேறி மலையடிவாரத்தை நோக்கி துரிதமாக இறங்குவதாகக் கூறப்படுகிறது.

கடந்த சில தினங்களாக இந்த எரிமலைக் குழம்பு தொடர்ந்து வெளியேறிக் கொண்டிருப்பதாகவும் மலையடிவாரத்திலுள்ள கிராமங்களில் உள்ள மக்கள் இதைக் கண்டு பெரும் பீதியடைந்துள்ளன எனவும் கூறப்படுகிறது.

## இன்று உற்சவம்

யாழ்ப்பாணம், சனி

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மாள் ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகின்றது. 19 நாட்கள்வரை உற்சவம் நடைபெறும். 17-வது நாள் தேர்த்திருவிழாவும் 18-வது நாள் தீர்த்த உற்சவமும், 19-வது நாள் பூங்காவன உற்சவமும் நிகழும்.

## சகல நாடுகளுடன் நட்புறவு

வாஷிங்டன், மே 21

அடுத்த சில வருடங்களுக்குள் சீனா உட்பட சகல நாடுகளுடனும் அமெரிக்கா நட்புறவுடன் விளங்குமென்று அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸன் நம்பிக்கை தெரிவித்தார்.

சீனாவுடனான உறவை விருத்தி செய்ய முடியுமென்று திரு நிக்ஸன் நம்பிக்கை தெரிவித்தார்.

உலகில் மக்களை மக்கள் பிரித்துவைக்கும் தடைகளை உடைத்தெறிய விரும்புகிறேன் உலகில் எந்த நாட்டுக்கும் எங்கள் பிள்ளைகள் போகக்கூடியதாக ஒரே உலகம் தோன்றவேண்டுமென்பதே எனது விருப்பம் என்றும் திரு நிக்ஸன் சொன்னார்

அடுத்த பத்து வருடங்களுக்குள் உலகநாடுகள் அனைத்துடனும் அமெரிக்கா நட்புறவு கொண்டிருக்கும் என்றும் அரசாங்கங்களுக்கிடையிலும் மக்களுக்கிடையிலும் அபிப்பிராயபேதங்கள் வேறுபாடுகள் எப்போதும் இருக்கக்கூடும் ஆனாலும் உலகில் சமாதானம் நிலைமுடியும் என்றும் திரு நிக்ஸன் கூறினார்

## மரண அறிவித்தல்

சோதிடர் வைத்தியலிங்கம்

ஊரெழு சோதிடர் வைத்தியலிங்கம் காலமானார். ஈமச்சடங்குகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஊரெழு பொக்கணை மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உறவினர்களும் நண்பர்களும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளுக. 2483

## விமானக் கட்டணமும் அதிகரிப்பு

கோட்டை, வெள்ளி

ஜூன்மாதம் முதல் திகதியிலிருந்து உள்ளூர் விமானக் கட்டணங்களை அதிகரிப்பதென எயர்சிலோன் ஸ்தாபனம் முடிவுசெய்துள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒருவழிப் பாதைக் கட்டணம் ஜூன் முதல் திகதியிலிருந்து 75 ரூபாவாக அதிகரிக்கும். போய்வர 150 ரூபாவாகவிருக்கும்.

கொழும்பு திருகோணமலைக் கட்டணம் 60 ரூபாவாகவும் போய்வர 120 ரூபாவாகவும் அதிகரிக்கும்.

கொழும்பு மட்டக்களப்பு கட்டணம் 50 ரூபாவாகவும் போய்வர 100 ரூபாவாகவும் இருக்கும்.

கொழும்பு அம்பாறை ஒருவழிப்பயணம் 50 ரூபாவாகவும் போய்வர 100 ரூபாவாகவும் இருக்கும்.

ஜூன் மாதத்திலிருந்து புகையிரதப்பகுதியும் இ. போ. சபையும் கட்டணத்தை அதிகரிக்க முடிவு செய்திருப்பதும் தெரிந்ததே.

......

## வேலைநீக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சிசபைகூட்டுறவு இலாகா ஆகியவற்றில் கடமையாற்றும் ஊழியர்களையும் இந்தச் சட்டம் கட்டுப்படுத்தாது

### 2வருடம் சிறை

சட்டத்தை மீறுவோர் ஆறுமாதத்துக்குக் குறையாத 2 ஆண்டுக்கு மேற்படாத தண்டனையை அனுபவிக்கக்கூடிய குற்றங்களை செய்தவர்களாகக் கணிக்கப்படுவர். அத்துடன் ஒரு முதலாளி இந்தச் சட்டத்தை மீறி தொழிலாளரை வேலையிலிருந்து நீக்கியது பிழை என நிரூபிக்கப்பட்டு தண்டனைபெற்ற மறுதினமே குறிப்பிட்ட தொழிலாளரை வேலைக்கமர்த்த வேண்டும். இவ்விதம் செய்யத்தவறும் முதலாளி தண்டனை பெற்ற நாளிலிருந்து ஒவ்வொரு நாளுக்கும் 50 ரூபா அபராதம் செலுத்தவேண்டி நேரிடும். அத்துடன் தொழிலாளிக்கு சம்பளமும் வழங்க வேண்டும் என்று அந்த மசோதாவில் கூறப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு மே மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org